ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# பதின் நாவலில் சிறுவர் உளவியல்

**முனைவர் அர.மீனா**

**உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை**

**அண்ணா ஆதர்ஷ் மகளிர் கல்லூரி,**

**சென்னை – 600 040.**

arangameena@gmail.com

## ஆய்வுச்சுருக்கம்

தற்போதைய இலக்கிய உலகில் குழந்தைகளுக்கான இலக்கியங்கள் தொடர்ந்துவந்து கொண்டிருக்கின்றன. குழந்தைகளின் நலன் குறித்தும் அவர்களின் உளவியல் குறித்தும் இன்று பெருமளவில்வி வாதிக்கப்படுவது ஆரோக்கியமான அணுகுமுறை. அவ்வகையில், எஸ்.இராமகிருஷ்ணன்அவர்களின்பதின்நாவல், கணினியின்வலைப்பிடிக்குள், அலைபேசியின் தொடுதிரைக்குள் சுயம் இழந்து, குழந்தமை தொலைத்து நிற்கும் இன்றைய சிறுவர்களுக்குக் கிடைக்காதவரங்களைப் பட்டியலிடுகின்றது. இளம்பருவத்தின் உயிர்ப்பை, வெகுளித்தனத்தை இயல்பாக பதிவு செய்கின்றது.

## திறவுச்சொற்கள்

பதின், பால்யம், சிறுவர்உளவியல், பெண்சமூகச்சூழல், வளர்இளம்பருவம்.

## நாவல் - அறிமுகம்:

ஐந்து வயது முதல் பதினைந்து வயது வரையிலானநந்து என்னும் சிறுவனின் நோட்டுக் குறிப்புகளே பதின் நாவலாக மலர்கின்றது.

நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தநந்து என்னும் நந்தகோபாலன்,தாய் மீது குறைவற்ற அன்பும், தந்தை மீது அளவற்ற கோபமும் கொண்டவன். அவனுக்கு உற்ற தோழன் சங்கர். அவனைவிட இரண்டு வயது மூத்தவன். புதிய உலகத்தை அறிமுகப்படுத்தும் சங்கரை,ஆசிரியர், பள்ளி, அம்மா, அப்பா, அக்கா என அனைவரின் கட்டுப்பாட்டில் இருந்து விதியை மீறத்துடிக்கும் தன் ஏக்கத்தைப் பூர்த்தி செய்கின்ற சங்கரை, தன் கனவு நாயகனாகவே பாவிக்கின்றான் நந்து. உலகத்தைப் புரிந்துகொள்ள முயற்சிக்கும் இவ்விருவரின் தேடல்கள் கதையின் கட்டமைப்பாக அமைகின்றது. **‘சிறுவர்கள் தனியுலகில் வாழ்கிறார்கள். அந்த உலகம் பெரியவர்களின் உலகைப் போன்றதில்லை. அதை விடச்சிக்கல்களும், சிடுக்குகளும், அவமானங்களும், வெறுப்பும், விரோதமும், விசித்திரமான சந்தோஷங்களும் நிரம்பியது’ (ப.12)** என்பதை

இவ்விருசிறுவர்களின் வாழ்க்கையில் ஏற்படும் மர்மமுடிச்சுகளால் மெல்ல கோடிட்டுக் காட்டுகின்றார் ஆசிரியர்.

## நாவலின் இலக்கியப் போக்கு:

- ஒவ்வொரு அத்தியாயமும் சிறுகதைபோல் அமைந்துள்ளமை இந்நாவலின் தனிப்பெருஞ் சிறப்பாக அமைகின்றது.
- கதையின் நாயகனே கதை சொல்லுகின்றான்.
- கதையின் தொடக்கம் படிப்போரைக் கவர்ந்திழுக்கின்றது.

**‘நீங்கள் இரும்புக்கை மாயாவியை நம்புகிறவரா?**

**வீட்டில் நிறைய அடி வாங்கியிருக்கிறீரகளா?**

**பயந்தாங்கொள்ளியா?**

**நிறைய பொய் சொல்வீரகளா?**

**எப்போதும் எதையாவது கற்பனை செய்து கொண்டேயிருப்பவரா?**

**ஆம் எனில் தொடர்ந்து படியுங்ககள். இல்லை என்றால் மூடிவைத்து விட்டுப் போய்விடுங்கள். இது என் கதை. எழுதுகிற நான் தான் உண்மையான இரும்புக்கை மாயாவி…. இதில் வரும் நான் என்ற சொல் என்னைக் குறிக்கவில்லை. நம்மைக் குறிக்கிறது’ (ப.9)** என்று தொடங்குகின்றது. இந்த உத்தி படிப்போரைத் தொடர்ந்து நாவலுக்கும் அழைத்துச் செல்ல உதவுகின்றது.

- குரல்கள், ஒரு நாளின் புதிர், நான் ஒரு கல் முதலிய அத்தியாயங்கள் இலக்கியத் தன்மை கொண்டனவாக அமைகின்றன.
- நாவலில் இன்பியல், துன்பியல் இரண்டும் உண்டு,
- எழுபதுகளின் ஆணாதிக்கப் போக்கினை, பெண்களின் துயர் மிகுந்த இல்லற வாழ்க்கையினைக் காட்டுகின்றது இந்நாவல்.

## தந்தை - மகன்உறவு :

தோழனாக இல்லாமல் எப்போதும் அதட்டிக் கொண்டும், அரற்றிக் கொண்டும் இருக்கும் தந்தையை வெறுக்கும் சிறுவர்களின் உள்ளத்தைப் படம் பிடித்துக்காட்டுகின்றார் ஆசிரியர்.

நந்து தான் செய்த சிறு திருட்டை மறைக்க முயன்று தன் தந்தையின் மீது சத்தியம் செய்கிறான். **‘சத்தியம் பண்ணிட்டு மீறினா உங்க அப்பா செத்துப் போயிடு**

**வார் தெரியும்லே?' என்று சங்கர் கேட்க, 'செத்துப்போனா போகட்டும்'(ப.18)** என்று பதிலுரைக்கின்றான்.

அப்பா வாங்கிக்கொண்டு வரச்சொன்ன சிகரெட் மழைநீரில் விழுந்துவிட, பயந்துகொண்டே தந்தையிடம் தருகின்றான் நந்து. 'நனைஞ்ச சிகரெட்டை என்ன செய்யுறது? ஒழுங்கா சொன்ன வேலையைச் செய்யத்துப்பில்லை' என்று கூறி, ஒரு டம்ளரில் தண்ணீர் கொண்டுவரச் செய்து, சிகரெட்டை அதில் கரைத்து நந்துவைக் குடிக்கச் சொல்லி வற்புறுத்துகின்றார். தடுக்க வந்த தாயை எட்டி உதைக்கின்றார். அதைக் கண்டு வெறுத்துப் போனநந்து **'எதற்காக அப்பா சிகரெட் பிடிக்கிறார்? ஏன் இப்படி எல்லோரையும் அடித்து வதைக்கிறார்? பேசாமல் அவரைக் கொன்றுவிடலாமா?' (ப.110)** என்று எண்ணுகின்றான்.

**பள்ளியில் அனைத்து மாணவர்களின் முன்பு நந்துவை கன்னத்தில் அறைந்து அவமானப் படுத்துகின்றார். (ப. 105)**

**இதே போன்று சங்கரின் தாயை மண்ணெண்ணெய் ஊற்றி அவன் தந்தை கொலை செய்து விட, அவன் தந்தையைக் கொல்ல கத்தி வாங்குகின்றான். (ப.235)**

இவ்வாறு அன்பும் அரவணைப்பும் இல்லாத தந்தைகளின் அதிகாரத்தினாலும், ஆணவத்தினாலும் மனச்சிதைவுக்கு ஆளாகும் சிறுவர்களின் குறியீடாக நந்துவும், சங்கரும் படைக்கப் பட்டிருக்கின்றனர்.

### தாய் - மகன்உறவு:

ஆண் பிள்ளைகள் தன் தாயின் வழியே உலகத்தைக் கற்றுக் கொள்ளப் பிரியப்படுகின்றனர். தாயின் மாறாத அன்பும், அரவணைப்பும் எப்போதும் தமக்கேகிடக்க வேண்டும் என்ற எண்ணம் ஒவ்வொரு மகனுக்கும் உண்டு. அதேபோல், நந்துவும் தன் தாயின் அன்பை எவருடனும் பகிர்ந்து கொள்ள விரும்பவில்லை . **'அம்மாவை நான் மிகவும் நேசித்தேன். அம்மா எனக்கு மட்டுமே யானவள். அவளை ஏன் இத்தனை பேர் பகிர்ந்து கொள்கின்றார்கள்' (ப.65)** என்று எண்ணுகின்றான். **'அம்மாவோடு நெருங்கியிருக்க ஏன் பெண்ணாய்ப் பிறக்காமல் போய்விட்டேன்? (ப.65) அம்மாவைப் பங்கு போடுவதை என்னால் ஏற்க முடியவில்லை' (ப.65)** என்று கூறும்போது ஆண்பிள்ளைகளின் உளவியலை வெளிச்சம் போட்டுக்காட்டுகின்றார் ஆசிரியர். நந்துவின் தந்தை தன்னை புகைப்படம் எடுத்து சுவரில் மாட்டியிருக்கின்றார் அதே போல தன் தாயின் புகைப்படத்தைத் தேடிய நந்துவிற்கு, **'கல்யாணத்துக்குப் பிறகு உங்க அப்பா கிட்ட போட்டோ எடுத்துக்கிடுவாமான்னு கேட்டேன் உன்**

**முகரக்கட்டைய நான் நான் ஒருத்தன் பாத்தா போதும். போட்டோ எடுத்து மாட்டிவர்றவன் போறவன் முறைச்சிப் பாக்கணுமாக்கும்னு அப்பா மறுத்துட்டார்' (ப.183)** என்று பதிலுரைக்கின்றாள் தாய். தாயை மகிழ்விக்க **'பேப்பரை மடித்து கேமரா போலச் செய்து அவள் முகத்திற்கு நேராகக் கொண்டு போய் கிளிக்கிளிக் என்று சப்தமிடுகின்றான்'. (ப.183)** தன் தந்தையின் புகைப்படத்தை எடுத்துக் கொண்டு போய் கிணற்றில் போட்டு விடுகின்றான். தாயின் மீது தன் தந்தை கொண்டிருக்கும் வன்மத்தை வெறுக்கின்ற சிறுவனின் பழியுணர்ச்சியை இதன் வழிகாட்சிப்படுத்துகின்றார் ஆசிரியர்.

## சிறுவர்களும் பெரியவர்களும்:

சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் உண்டான தலைமுறை இடைவெளி பல பிரச்சனைகளுக்குக் காரணமாகின்றது. உரக்கப் பேசும் பெரியவர்களைச் சிறுவர்களுக்குப் பிடிப்பதேயில்லை. **'பெரியவர்கள் ஏன் எப்போதும் கூச்சலிட்டுக் கொண்டே இருக்கிறாரகள். யாரோடாவது சண்டையிடுகிறாரகள். அற்பவிஷயங்களுக்காக ஆத்திரப்பட்டுக் கத்துகிறார்கள். இட்லி வேண்டும் என்பதைக் கூட அதிகாரத்துடன் ஆணை இடுகிறார்கள்' (ப.49)** என நந்து நினைப்பதாக ஆசிரியர் பதிவு செய்கின்றார். பெரியவர்களின் கட்டுப்பாடும், அதிகாரமும் தங்களை அவர்களின் அடக்குமுறைக்குள் இட்டுச் செல்வதை சிறுவர்கள் விரும்புவதில்லை. **'பெரியவர்களுக்கு எதையும் சொல்லிப் புரியவைத்துவிட முடியாது. அவர்களுக்குச் சிறுவர்கள் மீது ஏதாவதுபுகார் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும்' (ப.29)** என்ற நந்துவின் குற்றச்சாட்டு பெரியவர்களிடம் இருந்து சிறுவர்கள் விலகிப்போக நினைக்கும் உளவியலை அடையாளம் காட்டுகின்றது.

## புதியனகற்கும் ஆர்வம்:

சிறுவர்களுக்கு ஆயிரமாயிரம் கேள்விகள் உதித்துக்கொண்டே இருப்பது இயல்பு. கேள்விகள் அவர்களின் உள்ளத்தை, சிந்தனை ஆற்றலை, புதிதாககற்கும் ஆர்வத்தை வெளிப்படுத்துகின்றன எனில் அது மிகையில்லை. நந்துவுக்கும் எண்ணற்ற கேள்விகள் தோன்றுகின்றன.

- **முதல் மழைத்துளி எங்கே விழுந்திருக்கும் யார் பார்த்திருப்பார்கள்? (ப.8)**
- **சிவன் உடுத்தியிருக்கும் மான் தோல் எந்த மானுடையது? அதை ஏன் அவர் கொன்றார்? (ப.32)**
- **ஒருகை இல்லாதவன் எதற்காக இரண்டு கைகளும் உள்ள சட்டையை அணிந்து கொள்கிறான்? (ப.47)**

- **எதற்காகக் கோழிகள் எப்போதும் அவசர அவசரமாகச் சாப்பிடுகின்றன? (ப.57)**
- **ஆண்கள் ஏன் குடை பிடிப்பதில் கூட வண்ணத்தை ஏற்றுக் கொள்வதில்லை. (ப.92)**
- **சோன்பப்டி மழையாகப் பொழிந்தால் நன்றாக இருக்குமே. ஏன் வானத்தில் யாருக்கும் சோன்பப்டி பிடிக்காதா? (ப. 96)**
- **காது, கண்கள், மூக்கு எல்லாம் விழுகின்றதா என்ன? பல் மட்டும் ஏன் விழுந்து முளைக்க வேண்டும். (ப.148)**

என ஏன் ஏன் என்ற கேள்விகளை மனதில் போட்டுக் குடைந்து கொள்கின்றான் நந்து. சிறுவர்களின் உலகில் எந்த வஞ்சகமும் இல்லை என்பதால் அனைத்திற்கும் காரணம் தேடி அலையும் அவர்களின் மனப் போக்கினை ஆசிரியர் மிக இயல்பாக வெளிப்படுத்துகின்றமை கண் கூடு.

## சிறுவர்களின் எதிர்பார்ப்புகள்:

சிறுவர்களுக் கென்று தனிப்பட்ட பல எதிர்பார்ப்புகள் உண்டு. அவை, அவரகளின் அறிவுக்கு அப்பாற்பட்டவையாக, கற்பனை உலகில் புதிய புதிய அனுபவங்களைப் பெறவிரும்பும் அவர்களின் மனவோட்டத்தை வெளிப்படுத்துவனவாக அமைகின்றன.

- **காலம் ஒவ்வொரு நாளாகத்தான் கடந்து போகும் என்பது எவ்வளவு துரதிருஷ்டம்! சிறுவரகள் அதை முழுமையாக உணருகிறார்கள். தாவித்தாவி வேறு வயதுளை அடைய முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் எனத் தவிக்கிறார்கள். (ப.12)**
- **சோப்பு நுரைக் குமிழிபோல நானும் காற்றில் மிதந்து போய் விட முடியாதா என ஏங்கியிருக்கிறேன். (ப.12)**
- **திடீரென ஒருநாள் பெண்ணாக மாறிவிட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும். (ப.65)**
- **ஆட்டைப் போல மனிதர்களுக்கும் கொம்பு இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும். (ப.69)**
- **பள்ளிக்கூடம் வானத்தில் இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும். (ப.71)**

என்பன போன்ற எதிர்பார்ப்புகள், நிகழ்காலத்தில் தாங்கள் சந்திக்கும் பிரச்சனைகளுக்கு மாற்று வழிதேடும் அவரகளின் மன நிலையைச் சுட்டிக் காட்டுகின்றது.

### சிறுவர்களின் சேட்டைகளும் விளையாட்டுகளும்:

ஆண்பிள்ளைகள் இயல்பாகவே சுதந்திர மனப்போக்கை உடையவர்கள். அவர்களின் சேட்டைகள் பல குழந்தைத்தனமாகவும், சிலவயதுக்கு மீறிய அனுபவமாகவும் காணப்படுகின்றன.

- **அப்பாவின் செருப்பிற்குள் காலைமாட்டிக் கொண்டு நடப்பது. (ப.11)**
- **பெண்பிள்ளைகள் போடும் வளையலைப் போட்டுப் பார்ப்பது. (ப.36)**
- **நாய்கள் ஜாக்கிரதை என்ற போர்டை நாங்கள் ஜாக்கிரதை என மாற்றுவது (ப.70)**
- **திருடி பரோட்டோ தின்பது, சுவரில் சிறுநீரால் வட்டமிடுவது (ப.20),**
- **நண்பனின் தங்கையை சைட் அடித்தவனை அடிப்பது (ப.54)**
- **வீட்டைவிட்டு ஓடிப்போவது (ப.90)**
- **தான் அழகாக இருக்கிறோம் என பெண்பிள்ளை சொன்னதைக் கேட்டுத் தன்னை மேலும் அழகுபடுத்திக் கொள்வது (ப.104)**
- **காதலிப்பவர்கள் தான்பியானோ வாசிப்பார்கள் என்று நம்புவது (ப.118)**
- **எவ்வளவு தூரம் எச்சில் துப்புகிறோம் என்று விளையாடுவது (ப.126)**
- **தீட்டு கழித்த நாணயத்தை எடுத்து ஐஸ் வாங்கித்தின்பது (ப.144)**
- **முதலிரவு காட்சியைப் பார்த்துவிட்டுத் தன் படுக்கையிலும் செவ்வரிபூக்களைத் தூவிப்படுத்துக் கொள்வது. (ப.162)**
- **லென்ஸை வைத்து பேப்பர் ஓரத்தை எரிப்பது, காந்தத்தைக் கொண்டு மண்ணை ஒட்டவைப்பது (ப. 169)**
- **ஆள்காட்டி விரலை பிளேடால் வெட்டி நட்பினை உறுதி செய்து கொள்வது (ப. 179)**
- **வீடு முழுக்க தோசைமாவை ஊற்றி தோசை இட்டு வைப்பது. (ப. 227)**
- **சாலையில் கண்ணாடி போட்டவர்களை எண்ணுவது (ப.229)**

என இவற்றில் பல இக்காலக் குழந்தைகள் அறியாத சந்தோஷத் தருணங்கள்.

### பெண் சமூகச்சூழல்:

பதின்நாவல் கடந்த காலத்தின் தொகுப்பு. எழுபதுகளில் வாழ்ந்த சமூகத்தினரின் வாழ்வியல் வரலாறு. இக்காலத்தில் வாழ்ந்த ஆண் பெண் சமூகச் சூழலை வெளிப்படுத்தும் ஆவணம். இந்நாவலில் சிறுவர் உளவியலைக் கூற வந்த ஆசிரியர்,

சிறுவர்களோடு தொடர் புடைய பெண்களின் வாழ்வியலையும் கோடிட்டுக் காட்டத் தவறவில்லை. நந்துவின் தாய், சகோதரி, பாட்டிகள், தோழிகள், அக்கம் பக்கத்து வீட்டுப் பெண்கள், சங்கரின் தாய் ஆகியோர் இந்நாவலின் பெண் கதாபாத்திரங்களாகின்றனர். இவர்கள் அனைவரும் ஒரு ஒரு அத்தியாயங்களில் மட்டுமே உலா வருகின்றனர். எனினும், இவர்களின் புனைவுகள் பெண் பற்றிய கருத்தாக்கங்களை முன் வைக்கின்றன. ஆண்களின் பார்வையில் பெண் கற்பிதங்களை அடையாளம் காட்டுகின்றன. குறிப்பாக, நந்துவின் தாயார் பாத்திரப் படைப்பு ஒன்றே அக்காலப் பெண்களின் வாழ்வியல் சிக்கல்களை எடுத்துரைக்கின்றது. எழுபதுகளின் பெண்ணடிமைத்தைப்பறை சாற்றும் குறியீடாக நந்துவின் தாய் படைக்கப்பட்டிருக்கிறாள். அவற்றைப் பின் வரும் தலைப்புகளில் காணலாம்.

## பொருளாதாரச் சுதந்திரமற்றநிலை:

தாய் வழிச்சமூகமாக இருந்தநிலை மாறி தந்தை வழிச் சமூகத்தில் பயணப்பட்ட போது ஆணுக்கென்று சில நீதிகளும், பெண்ணுக்கென்று சில நீதிகளும் வரையறுக்கப்பட்டன. பெண் ஆணைச் சார்ந்தே வாழப்பழக்கப்பட்டாள்; கல்வியும் சுதந்திரமும் ஒருசேர அவளிடமிருந்து பறிக்கப்பட்டன. இல்லறம் ஆற்றுவதே தலையாய கடன் என்று கற்பிக்கப்பட்டாள்; தன் சொந்த செலவுக்குக் கூட கணவனின் தயவை அல்லது மகனின் தயவை எதிர்பார்க்கும் நிலைக்குத் தள்ளப்பட்டாள்.

இங்கே நந்துவின் தாயும் அவ்வாறான சூழலில் வாழப்பழகியவளாக, நேராகத் தன் கணவனிடம் தன் சொந்த செலவுக்குப் பணம் கேட்க மனமின்றி, அவ்வப்போது தன் கணவனின் சட்டைப்பைக்குள் அவருக்குத் தெரியாமல் பணம் எடுத்துப் பத்திரப்படுத்தும் சாதாரணக் குடும்பத் தலைவியா கச்சித்தரிக்கப்பட்டுள்ளார். தன் தோழன் சங்கரின் உதவியுடன் முதன் முறையாகத் திருடியநந்து, அது தவறா சரியா எனக் குழம்பிய வேளையில், தன் தாய் தன் தந்தையின் சட்டையில் பணம் எடுப்பதைப் பார்க்கின்றான். **'ஒருநாள் அப்படி அம்மாவே அப்பாவின் சட்டைப்பையில் இருந்து காசு திருடுவதைப் பார்த்தேன். அவளும் என்னைக் கவனித்திருக்க வேண்டும்' (ப.27)** என்று கூறும்போது, சொந்த வீட்டிலேயே திருடிச் சேமிக்கும் கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட பெண்மையினைப் படம் பிடித்துக் காட்டுகின்றார் ஆசிரியர்.மேலும், **'தனக்கு விருப்பமான சேலையை சீட்டுப் போட்ட பணத்தில் ரகசியமாக வாங்கிக் கொள்வாள்'(ப.231)** என்ற பதிவு பொருளாதாரச் சுதந்திர மற்ற பெண்களின் இழிநிலையை உணர்த்துகின்றது.

**புத்தகம்படிக்கமறுக்கப்படுவது:**

பெண்கள் தனக் கென்று சில விருப்புகளையோ, வெறுப்புகளையோ கொண்டிருக்கக் கூடாது என்பதில் ஆண்கள் மிக கவனமாக இருக்கின்றனர். அதற்கு நந்துவின் தந்தையும் விதி விலக்கல்ல. **'எந்த வேலைகளை ஆண்கள் செய்ய வேண்டும் என்பதிலும் எது பெண்கள் செய்ய வேண்டிய வேலை என்பதிலும் பிடிவாத எண்ணம் கொண்டிருந்தார்' (ப.111). 'பெண்கள் ஒரு போதும் செய்யக்கூடாத வேலை என்பது புத்தகம் படிப்பது' (ப.111)** என்பது அவருடைய ஆணித்தரமான கட்டுப்பாடு. இக்கட்டுப்பாட்டை மீறுவது தான் நந்துவின் தாயாருக்குச் சவாலாக அமைகின்றது. **'புத்தகத்தை அப்பாவின் கண்ணில் படாமல் சமையல் அறையின் அலமாரிக்குள் வைத்திருப்பாள்;' (ப.111).** ஏனெனில், **'அப்பா ஒரு போதும் சமையல் அறைக்குள் வருவது கிடையாது. வெந்நீர் கேட்டு எப்போதாவது வந்தால் கூட அசூயையோடு ஒதுங்கி நிற்பது போலவே இருப்பார்' (ப.112)** என்பதினின்று, பெண்கள் தனக் கென்று தனிப்பட்ட விருப்பம் கொண்டு வாழ முடியாமலும், தன் கனவுகளை இரகசியமாக வேநிறை வேற்றிக்கொள்ளும் துயர நிலையையும் வெளிச்சம் போட்டுக்காட்டுகின்றார் ஆசிரியர்.

**புகைப்படம் எடுக்க மறுப்பு:**

தான் மட்டுமே உலகில் மதிக்கப் படக்கூடியவன் என்ற ஆணாதிக்கக் கொள்கை கொண்ட நந்துவின் தந்தை, அலுவலகத்தில் டைகட்டி எடுத்த புகைப்படத்தை வீட்டில் மாட்டியிருக்கின்றார். தந்தையின் புகைப்படம் கண்ட நந்து, தாயின் புகைப்படத்தைத் தேடுகின்றான். **'எங்க வீட்ல பொம்பளைப் புள்ளைக போட்டோ எடுக்குறது தப்புனு விடமாட்டாங்க. கல்யாணத்துக்குப் பிறகு உங்க அப்பாகிட்ட போட்டோ எடுத்துகிடுவாமான்னு கேட்டேன். உன் முகரக்கட்டைய நான் ஒருத்தன் பார்த்தா போதும். போட்டோ எடுத்துவரறவன் போறவன் முறைச் சிப்பாக்கணுமாக்கும்னு அப்பா மறுத்துட்டார்' (ப183)** என்று பதிலுரைக்கின்றாள் நந்துவின் தாய். தன் சொந்த விருப்பங்களுக்குக் கூட கணவனின் அனுமதியை எதிர்பார்க்கும் சூழலிலேயே பெண்கள் வாழ்ந்துள்ளனர் என்ற உண்மை முகத்தில் அறைகின்றது.

**மனைவி சொல் கேளாமை:**

சாதாரணமாக வீட்டில் நடைபெறும் நிகழ்வுகளில் கூட மனைவியின் சொல்லை ஏற்பதில்லை ஆண்கள். அங்கும் தன் சொல் மட்டுமே அம்பலத்தில் ஏற வேண்டும் என்ற முனைப்புடனேயே செயல்படுகின்றனர்.

நந்துவின் சித்தப்பா புதுவீடு கட்டியிருக்க, நந்துவும் அவன் குடும்பத்தினரும் அங்கே உணவருந்த செல்கின்றனர். தன் வீட்டிலிருந்து தொலைவில் இருக்கும் அவருடைய இடத்திற்கு **'ரிக்ஷா பிடித்துப் போய்விடலாம்' (ப.95)** என்கின்றார். நந்துவின் தாய். **'வேண்டாம் டவுன் பஸ் பிடித்துப் போகலாம்' (ப.95)** என்கின்றார் அவன் தந்தை. பயங்கரக் கூட்டத்துடன் வந்த பேருந்து, நிறுத்தத்தை விட்டுத் தள்ளிப் போய் நிற்க, ஒருகையில் நந்துவையும், ஒருகையில் நந்துவின் சகோதரியையும் பிடித்துக் கொண்டு நந்துவின் தாய் ஓடுவதற்குள் பேருந்து கிளம்பிவிட்டது. கோபத்துடன் தன் கணவனைக் கோபித்துக் கொண்டு வேகமாகத் திரும்பச்செல்ல முயல்கின்றாள். உடனே அவளை சமாதானப்படுத்தும் விதமாக **'ரிக்ஷாவில் போகலாம்' (ப.97)** என்கின்றார்தந்தை. தன் மனைவியின் பேச்சைக் கேட்டு, தான் நடக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற அவருடைய மனப்போக்கு இதன் வழி புலப்படுகின்றது.

மேலும், சித்தப்பா வீட்டில் உண்டு முடித்து வீட்டிற்குத் திரும்பும் போது **'பஸ் எப்போதாவது தான் வரும் நடந்து போயிருவோம்' (ப.98)** என்று கூற, **'அம்மா தங்கையைக் கையில் பிடித்து இழுத்துக் கொண்டு வேகு வேகு வென நடக்க ஆரம்பித்தாள்..... அப்பா ஒரு ஆள் பைக்கில் பின்னால் உட்கார்ந்து கொண்டு எங்களைக் கடந்து போனார்.... அம்மாவின் முகம் கருத்துப் போனது' (ப.98)** என்ற இந்த நிகழ்வுகளைக் காணும் போது, தன் மனைவியோ பிள்ளைகளோ வெயிலில் நடப்பதைப் பொருட்படுத்தாது, அவர்களைப் பாதுகாப்பாக அழைத்துச் செல்ல வேண்டும் என்ற பொறுப்புணவர்வின்றி, தான் மட்டும் சுகமாக பயணம் செய்ய விரும்பும் ஆணாதிக்க மனநிலையை இந்த சாதாரண நிகழ்வுகளின் மூலம் படம் பிடித்துக்காட்டுகின்றார் ஆசிரியர்.

**போராட்டமான வாழ்க்கை**

எப்போதும் கணவனின் பேச்சுக்களுக்குக் கட்டுப்பட்டு, அவருக்குப் பணிவிடை செய்தே காலம் கழிக்கும் நிலையில் வாழும் பெண்கள் மனச்சிதைவுக்கு ஆளாகின்றமை கண் கூடு. வீட்டு வேலைகள், பிள்ளைகளைக் கவனிப்பது என ஓய்வில்லாமல் வேலை செய்வது மட்டுமே பெண்களின் இல்லறக் கடமை என்று கற்பித்த சமூகச் சூழலில் பெண்கள் தங்கள் சுயம் இழந்து துயருற்றனர் என்பது கவனிக்கத்தக்கது.

**'அம்மா தனது பழைய சேலையை வைத்து உறைதைத் திருப்பாள். புது உறை மாட்டி கட்டிலில் போட்டதும் அது அப்பாவிற்கு உரியதாகிவிடும்' (ப.129)**. **'இந்த வீட்டில் அவரது அறைமாடியில். அதைத் தினமும் கூட்டித் துடைத்து நறுமணப்பத்தி ஏற்றி வைத்துப் பராமரிக்கவேண்டும்' (ப.112)** என்ற பதிவுகள், ஆண் சமூகம் தன்னை உயர்த்தப் பட்ட நிலையிலும், பெண்ணை அடிமட்டத்தில் வைத்தே வாழப் பழகிய சூழலிலும் இருந்தனர் என்பதை உணர்த்துகின்றன.

தன் மகனை சிகரெட் வாங்கி வரச் சொன்ன தன் கணவனை எதிர்த்துக் கேள்வி கேட்கிறாள் நந்துவின் தாய். **'எல்லாம் நீ கெடுக்கிற கெடுதல் எல்லோரையும் கொன்றுட்டு நானும் செத்துப் போறேன் பாரு' (ப.109)** என்று கோபப்பட்ட தன் கணவனிடம் **'அதைச் செய்யுய்யா நிம்மதியா இருக்கும். தினம் தினம் செத்துப் பிழைக்கறதுக்குப் பதிலா ஒரேடியாகச் செத்துப் போயிரலாம்' என ஆங்காரத்துடன் கூறுகிறாள் (ப.109)** அதைக் கேட்டு கோபம் கொண்டு காலால் அவள் இடுப்போடு சேர்த்து மிதித்து விட்டு வெளியில் சென்று விடுகின்றான். அவள் வலிதாளாமல் கதறி அழுகிறாள்.

தான் என்று அகங்காரமும், தன்னை எதிர்த்துப் பேசிய மனைவியை தன் உடல் வலிமையால் அடக்கி ஆளும் கர்வமும் கொண்ட ஆணாதிக்கச் சூழலை விவரிக்கின்றது இக்காட்சி. போராட்டம் நிறைந்த வாழ்க்கையில் தங்களைப் பிணைத்துக் கொண்டு அனுதினமும் செத்துப் பிழைக்கும் நிலையில் வாழ்ந்த பெண் சூழலையும் விவரிக்கின்றது.

## சர்வாதிகாரம்:

- **'அம்மா ஏன் தன்னை அழகுப்படுத்திக் கொள்ள மாட்டேன் என்கிறாள்' (ப.65)**
- **'அம்மா எதையோ நினைத்துப் பயந்து கொண்டேயிருக்கிறாள்' (ப.65)**
- **'பெண்கள் ஏன் எப்போதும் எப்போதோ நடக்கப் போகிற ஒன்றைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கின்றனர்' (ப.183)**

என்ற நந்துவின் கேள்விகள் பெண்கள், ஆண்களின் அடிமைத்தனத்தில் தன் சுயம் இழந்து நிற்கின்ற சூழலை நம் கண்முன் கொண்டு வருகின்றன. **சர்வாதிகாரிகள் உலகிலிருந்து மறைந்து போயிருக்கலாம். ஆனால் வீட்டில் வாழத்தான் செய்கிறார்கள் (ப.111)** என்ற ஆசிரியரின் கூற்றும் இக்கருத்தை அரண் செய்கின்றது.

## பெண் குறித்தபார்வைகள்:

**தனக்குக் காதல் கடிதம் கொடுத்த ஆணிடம் தன் காதலைச் சொல்ல அச்சம் கொண்டு, கடிதத்தைக் கிழித் தெறிகின்றாள் நந்துவின் சகோதரி (ப.188)** இதனை **ஆசைமுத்தங்கள்** என்ற அத்தியாயம் வெளிப்படுத்துகின்றது. தான் விரும்பிய ஆணைத் திருமணம் செய்து கொள்ளவதற்கு முழு உரிமை இல்லாத கால கட்டத்திலேயே பெண்கள் வாழ்ந்துள்ளனர் என்பதற்கு இவ்அத்தியாயம் சான்று பகர்கின்றது.

**'பொதுவாக கிழவிகள் எவரும் சினிமாவிற்குப் போவது கிடையாது. அது போலவே சினிமா பார்த்து விட்டு வருவதையும் மிகப் பெரியபாவம் என்று திட்டிக் கொண்டேயிருப்பார்கள்' (ப.30)** என்ற பதிவு பெண்களின் அடிமைத் தன வாழ்வின் அவலத்தைச் சுட்டுகின்றது.

**'எதற்காக சலூன்களில் குளிக்கும் பெண்களின் படமாக வைத்திருக்கிறார்கள்' (ப.190)** என்ற நந்துவின் கேள்வி, பெண்களைப் போகப் பொருளாக மட்டுமே பார்க்கும் ஆண்களின் கய மைத்தனத்தைப் பறை சாற்றுகின்றது.

## முடிபு:

சிறுவர்களின் வாழ்க்கையில் ஏற்படும் சின்னஞ் சிறு நிகழ்வுகளால் அவர்களின் உள வோட்டத்தைப் படம் பிடித்துக் காட்டும் பதின் நாவல், இலக்கிய உலகில் புதிய சாதனை படைத்திருக்கின்றது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. அறுபதுகளில், எழுபதுகளில் வாழ்ந்த பெண்ணினம் தங்கள் அதிகாரத்தை இழந்து கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரச் சுதந்திரம்யாவும் மறுக்கப்பட்ட நிலையில்

ஆணாதிக்கத்தின் பிடியில் வாழ்ந்துள்ளனர் என்பதை இந்நாவல் மிகச்சிறப்பாக வெளிப்படுத்துகின்றது. ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானம் என்ற பாரதியாரின் கூற்றை மெய்ப்பிப்பதே தலையாய கடமை என்றும் வலியுறுத்துகின்றது.

**முதன்மை நூல்**

பதின், எஸ்.இராமகிருஷ்ணன், உயிர்மைபதிப்பகம், சென்னை. ISBN NO. 978 – 93 – 85104 - 86 - 2